<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2026ம் வருடம் ஏப்ரல் திங்கள் 09ம் நாள் வியாழக்கிழமை</u>

<u>அசல் வழக்கு எண். 173/2016</u>

<u>CNR Number : TNMD15-000183-2016</u>

--------

P. கருப்பணகோன் என்ற கோபால். .... வாதி

/எதிர்/

1. K. சௌந்திரபாண்டியன்.
2. C. பெரியசாமி.
3. U. சந்திரசேகரன்.
4. M. முத்துப்பாண்டி.
5. P. தங்கம் என்ற முத்துக்கருப்பன்.
6. P. தவமணி என்ற முத்துலிங்கம்.
7. M. உஷா தேவி.
8. S. வெள்ளைத்தாய். ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு 12.03.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.சுல்தான் அலாவுதீன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4, 6 மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.R. முருகேசன் அவர்கள் ஆஜராகியும், 5, 7 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

இந்த வழக்கானது வாதி தரப்பில் தாவா சொத்தில் வாதியின் அமைதியான

அனுபவத்திற்கு பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டும் இதர பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :–

2.1) தாவா சொத்து ஆதியில் காலம் சென்ற பாளையத்தான் அம்பலத்திற்கு பாத்தியப்பட்டது. பாளையத்தான் அம்பலத்திற்கு வீரணன் அம்பலம், பூச்சி என்ற வீரணன் அம்பலம் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர். வாதியின் தாயார் காலம்சென்ற, P. பாப்பாத்தி அம்மாள், W/o. பெரியசாமி கோனார் என்பவர் பாளையத்தான் அம்பலம் மகன் வீரணன் அம்பலத்திடமிருந்து 17.10.1946ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலம் தாவா சொத்தின் 1/2 பங்குச் சொத்தை கிரையம் பெற்றார். அதன்பிறகு 13.05.1950 அன்று வாதியின் தாயார் தாவாச் சொத்தின் மற்றொரு பாதியை பாளையத்தான் அம்பலத்தின் மற்றொரு மகன் பூச்சி என்ற வீரணன் அம்பலத்திடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி, பாளையத்தான் அம்பலத்தின் இரண்டாவது மனைவி அரசாத்தாள் இரண்டு கிரையங்களையும் ஒப்புக் கொண்டு 16.05.1950 அன்று ஒரு ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி, அரசத்தாள் தனக்காகவும் தனது இரண்டு மைனர் மகள்களையும், கட்டுப்படுத்தியும் அந்த கடிதத்தை வாதியின் தாயாரிடம் கொடுத்துள்ளார். தாவா சொத்துக்கு கீழ்புறம் உள்ள சொத்து வாதியின் மனைவி பார்வதி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அந்தச் சொத்தை வாதியின் மனைவியின் தகப்பனாரும் வாதியின் மாமனாருமான கி. முத்துக்கருப்பக் கோனாரால் கிரையம் பெறப்பட்டது. தாவாச் சொத்தை கிரையம் பெற்ற காலம் முதல் தாவா சொத்தானது வாதியின் தாயார் அனுபவத்திலும், அதன்பிறகு வாதியின் அனுபவத்திலும் இருந்து வருகிறது. தாவா சொத்துக்கு வீட்டுவரி வாதியின் தாயார் கட்டி வந்தார். வாதியின் தாயார் 17.09.2009 அன்று இறந்துவிட்டார். வாதியின் மூத்த சகோதரர்

27.10.2009 அன்று இறந்துவிட்டார். வாதியின் தகப்பனார் 1964ம் ஆண்டிலேயே இறந்துவிட்டார். ஆகவே, தாவா சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது ஆகும்.

2.2) வாதி மேலும், சமர்ப்பித்துக் கொள்வது என்னவென்றால், தாவா சொத்திற்கு தென்புறம் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. அது காலியிடம் ஆகும். தாவா சொத்துக்கு மேல்புறம் உள்ள சொத்து 8வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகும். தற்போது, 1 முதல் 8 பிரதிவாதிகள் தாவாச் சொத்திற்குள் நுழைய முயற்சிக்கின்றனர். மேலே கூறியபடி, தாவா சொத்து பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரங்கள் மூலம் வாதிக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தில் உள்ள வாதியின் அனுபவம் சட்டப்படியானதாகும். தாவா சொத்திற்கு வாதியின் தாயாரும், வாதியும் தவறாமல் வீட்டு வரி கட்டி வந்தார்கள்.

2.3) வாதி மேலும், சமர்ப்பித்துக் கொள்வது என்னவென்றால், 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு தென்புறம் அவர்களது சொத்து உள்ளது. 8வது பிரதிவாதிக்கு மேல்புறத்தில் சொத்து உள்ளது. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையோ, அனுபவமோ கிடையாது. வாதிக்கு பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலம் உரிமை உள்ளது. வாதி தாவா சொத்து குறித்து வரி செலுத்தி வருகிறார். தாவா சொத்தை கிரையம் பெற்ற நாள் முதல் வாதியின் தாயார் மற்றும் வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி, விவரம் அனைத்தையும் பிரதிவாதிகள் நன்கு அறிவார்கள். ஆனால், பிரதிவாதிகள் ரவுடிகளை வைத்து பிப்ரவரி 2016 முதல் வாரத்திலும் பிறகு 10.02.2016 அன்றும், தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சித்தனர். மீண்டும் 13.06.2016 அன்று ஊரில் உள்ள ரவுடிகளை வைத்து நுழைய முயற்சித்தபோது, கிராமத்தில் உள்ள ஆட்களை வைத்து வாதி தடுத்துவிட்டார். ஆகையால் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 6ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 மற்றும் 8ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–

3.1) பிராதில் கண்டுள்ள சொத்து விபரம் சரியல்ல. வாதி வேண்டுமென்றே தெரிந்தே தவறான சொத்து விவரத்தை பிராதில் சொல்லியுள்ளார். வாதி சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகவில்லை. வாதிக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல.

3.2) பிராது பத்தி IV–ல் கண்டுள்ள விவரங்களை சட்டப்படி நிரூபிக்கப்பட வேண்டியது வாதியின் பொறுப்பாகும். பிராதில் குறிப்பிட்டுள்ள 17.10.1946 மற்றும் 13.05.1950ம் தேதியிட்ட கிரையப் பத்திரங்களின் மூலம் வாதியின் தாயார் P. பாப்பாத்தியம்மாள் வழக்கிடை சொத்தான கிழமேல் 26 அடி, தென்வடல் 34–1/2 அடி கொண்ட சொத்தை கிரையம் வாங்கவில்லை. அதனை நிரூபிக்கும் கடமை வாதிக்கு உண்டு. பிராதுடன் தாக்கல் செய்துள்ள 17.10.1946ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் மூலம் பாப்பாத்தியம்மாள் வீரணன் அம்பலத்திடமிருந்து சர்வே எண்.33ல் கிழமேல் 13 அடி, தென்வடல் 16–1/2 அடி கொண்ட காலிமனையிடத்தை கிரையம் வாங்கியதாக காட்டப்பட்டுள்ளது.

3.3) ஆரம்பத்தில் பாளையத்தானுக்குப் பாத்தியப்பட்ட மொத்தம் கிழமேல் 13 அடி தென்வடல் 34–1/2 அடியில் வடபுறம் கிழமேல் 13 அடி, தென்வடல் 16–1/2 அடி கொண்ட காலிமனையை பாப்பாத்தியம்மாள் கிரையம் வாங்கியதாக 17.10.1946ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த சொத்திற்கு கிழக்கு பக்கமோ அல்லது மேற்கு பக்கமோ பாளையத்தானுக்கு வேறு சொத்து எதுவும் கிடையாது. அதன்பிறகு மீதி தென்புறம் உள்ள கிழமேல் 13 அடி தென்வடல் 18 அடி கொண்ட மனையிடத்திற்கு வாதியின் தாயார் பாப்பாத்தியம்மாள் 13.05.1950ம் தேதி பூச்சி என்று வீரணன் அம்பலத்திடம் கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. இந்த பத்திரத்தின் மூலம் கிரையம் வாங்குவது தென்புறம் உள்ள கிழமேல் 13 அடி

தென்வடல் 18 அடி உள்ளது.

3.4) ஆனால், 13.05.1950ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் வடக்கு நான்குமாலாக இரணியம் கிராஸ்ரோடு என்று தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. அது தவறு. வடக்கே இருப்பது ஏற்கனவே, 17.10.1946ல் கிரையம் வாங்கிய 13 X 16–1/2 காலியிடம்தான். இதை மறைத்து வாதி தனக்கு கிழமேல் 13 + 13 = 26 அடியும், தென்வடல் 34–1/2 அடியும் கொண்ட சொத்து பாத்தியம் என்று பிராதில் கோருவது தவறு. அவ்வாறு பொய்யான சொத்து விவரம் கொடுத்து வாதி எதிர்வாதிகளையும், நீதிமன்றத்தையும் ஏமாற்றி தீர்ப்பு பெற முயற்சிப்பது சட்டப்படி குற்றம்.

3.5) வாதி தாக்கல் செய்யப்பட்டுள்ள 17.10.1946 கிரையப் பத்திரம் 13.05.1950 கிரையப் பத்திரம் ஆகியவற்றில் மேற்கு நான்குமாலாக தென்வடலோடிய சந்தும், பெரியனக்கோனார் கூரைவீடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் தாயார் கிரையம் பெற்றதாக கூறப்படும் சொத்திற்கு மேற்கே 10 அடி அகல தென்வடல் பாதையும், தெற்கேயும் பாதையும், வடக்கே ரோடும் உள்ளது. ஆனால், வாதி பிராது சொத்து விவரத்தில் மேற்கே உள்ள தென்வடல் சந்தையும், தென்புறம் உள்ள பாதையையும் மறைத்து அதையும் சேர்த்து எனது சொத்து என்று உரிமை கொண்டாடி வழக்கு தொடர்ந்துள்ளார். வாதியின் தாயார் கிரையம் வாங்கியதாகக் கூறும் சொத்திற்கு மேற்கே, தென்வடல் பாதையும், அதற்கு மேற்கே பெரியனக்கோனார் சொத்து இருந்தது. பின்னால் பெரியனக்கோனார் 8ம் பிரதிவாதி வெள்ளைத்தாய்க்கு வாக்கராலாக தானமாக கொடுக்கப்பட்டு வெள்ளத்தாய் அனுபவித்து வருகிறார். மற்ற பிரதிவாதிகளின் சொத்து தென்புறம் உள்ள பாதைக்கும் தென்புறம் உள்ளது. தென்புறம் உள்ள பாதையையும் மேல்புறம் உள்ள வெள்ளத்தாய் இவர்களின் சொத்துக்களையும் அபகரிக்க திட்டமிட்டுள்ளார். வெள்ளத்தாயின் உரிமையை ஊர்ஜிதம் செய்து அரசும் அவருக்கு ஜாரி பட்டா

வழங்கியுள்ளது. அந்த இடத்தில் வெள்ளத்தாய் கதவு எண்.1/65 கொண்ட கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார்.

3.6) பிராதில் கூறியுள்ளபடி பாப்பாத்தியம்மாள் 17.10.1946 பத்திரம் மூலம் தாவா சொத்தின் பாதியையும், 13.05.1950 கிரையப் பத்திரம் மூலம் மீதியுள்ள பாதியையும் கிரையம் பெற்றார் என்பதும், 16.05.1950ம் தேதி பாளையத்தானின் இரண்டாவது மனைவி அரசத்தாளும், அவரின் மகள்களும் சம்மதப்பத்திரம் எழுதிக் கொடுத்தனர் என்பதும் உண்மையல்ல. வாதியின் தாயாருக்கு வாதி மட்டும் வாரிசு என்பதும் உண்மையல்ல. வாதியின் சகோதரின் இந்த வழக்கில் அவசியமான கட்சிக்காரர்கள், அவர்களை கட்சிக்காரர்களாக சேர்க்காமல் தொடர்ந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல.

3.7) வாதியின் தாயார் தாவா சொத்தை வரி செலுத்தி அனுபவித்து வந்தார் என்பதும், அவருக்கு பின்பு வாதி அனுபவித்து வருகிறார் என்பதும் உண்மையல்ல. ஆனால், பிரதிவாதிகள் கடந்த 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாரத்திலும், பின்பு 10.02.2016ம் தேதி சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்தனர் என்பதும், மீண்டும் 13.06.2016 தேதியிலும், ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தனர் என்பதும் உண்மையல்ல.

3.8) தாவா சொத்து வாதிக்கு பாத்தியமும், அனுபவமும் இல்லை. தாவா சொத்து விவரம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தின் உரிமையை (Title) நிலைநாட்ட வேண்டிய கடமை வாதிக்கு உண்டு. தாவா சொத்து தனக்கு மட்டும் பாத்தியதை என்று விளம்புகைப் பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல.

3.9) தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், தெற்கேயும், மேற்கேயும் உள்ள பொதுச்சந்தையும், பாதையையும் அபகரிக்கும் எண்ணத்துடன் தாக்கல் செய்துள்ள

இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4.சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்

இவ்வழக்கில் வாதியின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதி திரு. P. பெரியகருப்பணக்கோன் (எ) கோபால் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பு சாட்சியான திரு. பாஸ்கரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு.சௌந்திரபாண்டியன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

05. எழுவினாக்கள்

1) Whether the suit property belongs to the Plaintiff as stated in the plaint?

2) Whether the plaintiff is entitled to the relief of Permanent injunction in respect of the suit property against the defendants as prayed for?

3) Whether this suit is barred from non joinder of necessary parties?

4) To what other reliefs the plaintiff is entitled for?

6.1) வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்து ஆதியில் காலம் சென்ற பாளையத்தான் அம்பலத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், பாளையத்தான் அம்பலத்திற்கு வீரணன் அம்பலம், பூச்சி என்ற வீரணன் அம்பலம் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர் என்றும், வாதியின் தாயார் காலம்சென்ற, P. பாப்பாத்தி

அம்மாள், W/o. பெரியசாமி கோனார் என்பவர் பாளையத்தான் அம்பலம் மகன் வீரணன் அம்பலத்திடமிருந்து 17.10.1946ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலம் தாவா சொத்தின் 1/2 பங்குச் சொத்தை கிரையம் பெற்றார் என்றும், அதன்பிறகு 13.05.1950 அன்று வாதியின் தாயார் தாவாச் சொத்தின் மற்றொரு பாதியை பாளையத்தான் அம்பலத்தின் மற்றொரு மகன் பூச்சி என்ற வீரணன் அம்பலத்திடமிருந்து கிரையம் பெற்றார் என்றும், மேற்படி, பாளையத்தான் அம்பலத்தின் இரண்டாவது மனைவி அரசாத்தாள் இரண்டு கிரையங்களையும் ஒப்புக் கொண்டு 16.05.1950 அன்று ஒரு ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி, அரசத்தாள் தனக்காகவும் தனது இரண்டு மைனர் மகள்களையும், கட்டுப்படுத்தியும் அந்த கடிதத்தை வாதியின் தாயாரிடம் கொடுத்துள்ளார் என்றும், தாவா சொத்துக்கு கீழ்புறம் உள்ள சொத்து வாதியின் மனைவி பார்வதி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அந்தச் சொத்தை வாதியின் மனைவியின் தகப்பனாரும் வாதியின் மாமனாருமான கி. முத்துக்கருப்பக் கோனாரால் கிரையம் பெறப்பட்டது என்றும், தாவாச் சொத்தை கிரையம் பெற்ற காலம் முதல் தாவா சொத்தானது வாதியின் தாயார் அனுபவத்திலும், அதன்பிறகு வாதியின் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்துக்கு வீட்டுவரி வாதியின் தாயார் கட்டி வந்தார் என்றும், வாதியின் தாயார் இறப்பிற்கு பின்பு, தாவா சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்திற்கு தென்புறம் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றும், தாவா சொத்துக்கு மேல்புறம் உள்ள சொத்து 8வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லாத 1 முதல் 8 பிரதிவாதிகள் தாவாச் சொத்திற்குள் நுழைய முயற்சிக்கின்றனர் என்றும், தாவா சொத்தை கிரையம் பெற்ற நாள் முதல் வாதியின் தாயார் மற்றும் வாதியின் அனுபவத்தில்

இருந்து வருகிறது என்றும், மேற்படி, விவரம் அனைத்தையும் பிரதிவாதிகள் நன்கு அறிவார்கள் என்றும், ஆனால், பிரதிவாதிகள் ரவுடிகளை வைத்து பிப்ரவரி 2016 முதல் வாரத்திலும் பிறகு 10.02.2016 அன்றும், தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்ய முயற்சித்தனர் என்றும், மீண்டும் 13.06.2016 அன்று ஊரில் உள்ள ரவுடிகளை வைத்து நுழைய முயற்சித்தபோது, கிராமத்தில் உள்ள ஆட்களை வைத்து வாதி தடுத்துவிட்டார் என்றும், எனவே, பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.2) பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, பிராதில் கண்டுள்ள சொத்து விபரம் சரியல்ல என்றும், வாதி வேண்டுமென்றே தெரிந்தே தவறான சொத்து விவரத்தை பிராதில் சொல்லியுள்ளார் என்றும், பிராதில் குறிப்பிட்டுள்ள 17.10.1946 மற்றும் 13.05.1950ம் தேதியிட்ட கிரையப் பத்திரங்களின் மூலம் வாதியின் தாயார் P. பாப்பாத்தியம்மாள் வழக்கிடை சொத்தான கிழமேல் 26 அடி, தென்வடல் 34–1/2 அடி கொண்ட சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றும், அதனை நிரூபிக்கும் கடமை வாதிக்கு உண்டு என்றும், பிராதுடன் தாக்கல் செய்துள்ள 17.10.1946ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் மூலம் பாப்பாத்தியம்மாள் வீரணன் அம்பலத்திடமிருந்து சர்வே எண்.33ல் கிழமேல் 13 அடி, தென்வடல் 16–1/2 அடி கொண்ட காலிமனையிடத்தை கிரையம் வாங்கியதாக காட்டப்பட்டுள்ளது என்றும், ஆரம்பத்தில் பாளையத்தானுக்குப் பாத்தியப்பட்ட மொத்தம் கிழமேல் 13 அடி தென்வடல் 34–1/2 அடியில் வடபுறம் கிழமேல் 13 அடி, தென்வடல் 16–1/2 அடி கொண்ட காலிமனையை பாப்பாத்தியம்மாள் கிரையம் வாங்கியதாக 17.10.1946ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றும், இந்த சொத்திற்கு கிழக்கு பக்கமோ அல்லது மேற்கு பக்கமோ பாளையத்தானுக்கு வேறு சொத்து

எதுவும் கிடையாது என்றும், அதன்பிறகு மீதி தென்புறம் உள்ள கிழமேல் 13 அடி தென்வடல் 18 அடி கொண்ட மனையிடத்திற்கு வாதியின் தாயார் பாப்பாத்தியம்மாள் 13.05.1950ம் தேதி பூச்சி என்ற வீரணன் அம்பலத்திடம் கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது என்றும், மேற்படி பத்திரத்தில் தென்புறம் உள்ள கிழமேல் 13 அடி தென்வடல் 18 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால், 13.05.1950ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் வடக்கு நான்குமாலாக இரணியம் கிராஸ்ரோடு என்று தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்றும், வடக்கே இருப்பது ஏற்கனவே, 17.10.1946ல் கிரையம் வாங்கிய 13 X 16–1/2 காலியிடம்தான் என்றும், இதை மறைத்து வாதி தனக்கு கிழமேல் 13 + 13 = 26 அடியும், தென்வடல் 34–1/2 அடியும் கொண்ட சொத்து பாத்தியம் என்று பிராதில் கோருவது தவறு என்றும், வாதி தாக்கல் செய்யப்பட்டுள்ள 17.10.1946 கிரையப் பத்திரம் 13.05.1950 கிரையப் பத்திரம் ஆகியவற்றில் மேற்கு நான்குமாலாக தென்வடலோடிய சந்தும், பெரியனக்கோனார் கூரைவீடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வாதியின் தாயார் கிரையம் பெற்றதாக கூறப்படும் சொத்திற்கு மேற்கே 10 அடி அகல தென்வடல் பாதையும், தெற்கேயும் பாதையும், வடக்கே ரோடும் உள்ளது என்றும், ஆனால், வாதி பிராது சொத்து விவரத்தில் மேற்கே உள்ள தென்வடல் சந்தையும், தென்புறம் உள்ள பாதையையும் மறைத்து அதையும் சேர்த்து தனது சொத்து என்று உரிமை கொண்டாடி வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், வாதியின் தாயார் கிரையம் வாங்கியதாகக் கூறும் சொத்திற்கு மேற்கே, தென்வடல் பாதையும், அதற்கு மேற்கே பெரியனக்கோனார் சொத்து இருந்தது என்றும், பின்னால் பெரியனக்கோனார் 8ம் பிரதிவாதி வெள்ளைத்தாய்க்கு வாக்கராலாக தானமாக கொடுக்கப்பட்டு வெள்ளத்தாய் அனுபவித்து வருகிறார் என்றும், மற்ற பிரதிவாதிகளின் சொத்து தென்புறம் உள்ள பாதைக்கும் தென்புறம் உள்ளது என்றும், தென்புறம் உள்ள பாதையையும்

மேல்புறம் உள்ள வெள்ளத்தாய் அவர்களின் சொத்துக்களையும் அபகரிக்க திட்டமிட்டுள்ளார் என்றும், வெள்ளத்தாயின் உரிமையை ஊர்ஜிதம் செய்து அரசும் அவருக்கு ஜாரி பட்டா வழங்கியுள்ளது என்றும், அந்த இடத்தில் வெள்ளத்தாய் கதவு எண்.1/65 கொண்ட கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார் என்றும், பிராதில் கூறியுள்ளபடி பாப்பாத்தியம்மாள் 17.10.1946 பத்திரம் மூலம் தாவா சொத்தின் பாதியையும், 13.05.1950 கிரையப் பத்திரம் மூலம் மீதியுள்ள பாதியையும் கிரையம் பெற்றார் என்பதும், 16.05.1950ம் தேதி பாளையத்தானின் இரண்டாவது மனைவி அரசத்தாளும், அவரின் மகள்களும் சம்மதப்பத்திரம் எழுதிக் கொடுத்தனர் என்பதும் உண்மையல்ல என்றும், வாதியின் தாயாருக்கு வாதி மட்டும் வாரிசு என்பதும் உண்மையல்ல என்றும், வாதியின் சகோதரரின் வாரிசுகள் இந்த வழக்கில் அவசியமான கட்சிக்காரர்கள் என்றும், அவர்களை கட்சிக்காரர்களாக சேர்க்காமல் தொடர்ந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், வாதியின் தாயார் தாவா சொத்தை வரி செலுத்தி அனுபவித்து வந்தார் என்பதும், அவருக்கு பின்பு வாதி அனுபவித்து வருகிறார் என்பதும் உண்மையல்ல என்றும், ஆனால், பிரதிவாதிகள் கடந்த 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாரத்திலும், பின்பு 10.02.2016ம் தேதி சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்தனர் என்பதும், மீண்டும் 13.06.2016 தேதியிலும், ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தனர் என்பதும் உண்மையல்ல என்றும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியமும், அனுபவமும் இல்லை. தாவா சொத்து விவரம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தின் உரிமையை (Title) நிலைநாட்ட வேண்டிய கடமை வாதிக்கு உண்டு என்றும், தாவா சொத்து தனக்கு மட்டும் பாத்தியதை என்று விளம்புகைப் பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட

சொத்துக்களையும், தெற்கேயும், மேற்கேயும் உள்ள பொதுச்சந்தையும், பாதையையும் அபகரிக்கும் எண்ணத்துடன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.3) வாதி தரப்பில், வாதி திரு. P. சௌந்திரபாண்டியன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் 17.10.1946ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.1233/1946) அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 13.05.1950ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.1333/1950) அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 16.05.1950ம் தேதியிட்ட விடுதலைப் பத்திரம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 23.05.1974ம் தேதியிட்ட ஈடுகடன் பத்திரம் (ஆவண எண்.2091/1974) அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1996 – 1997ம் ஆண்டுக்கான வீட்டுவரி இரசீது அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.03.2002ம் தேதியிட்ட பண வரவு இரசீது அசல் (ஆவண எண்.908/2002) வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2001 – 2002ம் ஆண்டுக்கான வீட்டுவரி இரசீது அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2005–2006ம் ஆண்டுக்கான வீட்டுவரி இரசீது அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2014 – 2015, 2015 – 2016, 2016 – 2017ம் ஆண்டுக்கான வீட்டுவரி இரசீது அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 26.12.1958ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (ஆவண எண்.7954/1958) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பாப்பாத்தி அம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ராசுக்கோனார் என்ற முத்துக்கருப்பன் என்பவரின் இறப்பு

சான்றிதழ் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. குறுந்தகடு வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 30.06.2016ம் தேதியிட்ட இரசீது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பு சாட்சியான திரு. பாஸ்கரன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

6.4) மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியான திரு.சௌந்திரபாண்டியன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் சர்வே எண்.33/7க்கான மனைவரி தோராய பட்டா பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.33/2க்கான மனைவரி தோராய பட்டா பி.வா.சா.ஆ–2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.33/10க்கான மனைவரி தோராய பட்டா பி.வா.சா.ஆ–3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.33/1க்கான அனுமந்த பட்டா பி.வா.சா.ஆ–4ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.33/3க்கான அனுமந்த பட்டா பி.வா.சா.ஆ–5ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.33–க்கான புல வரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ–6ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.1/65–க்கான வீட்டுவரி ரசிதுகள் அசல் 7 எண்ணிக்கை பி.வா.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வெள்ளத்தாயி பெயரில் உள்ள மின் கட்டண ரசிதுகள் அசல் (எண்ணிக்கை 2) பி.வா.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

07. எழுவினாக்கள் 1 முதல் 3ற்கான தீர்வு :–

1) Whether the suit property belongs to the Plaintiff as stated in the plaint?

2) Whether the plaintiff is entitled to the relief of Permanent injunction in respect of the suit property against the defendants as prayed for?

3) Whether this suit is barred from non joinder of necessary parties?

7.1) வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.1 ஆவணமான 17.10.1946ம் தேதிய கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.2 ஆவணமானது 13.05.1950ம் தேதிய கிரைய ஆவணம் மூலம் வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை ஒப்புக் கொண்டு வா.சா.ஆ.3 – 16.05.1950ம் தேதிய ஒப்புதல் கடிதமானது பாளையத்தான் அம்பலத்தின் இரண்டாவது மனைவி அரசாத்தாள் என்பவர் தனக்காகவும், மைனர் குழந்தைகளை கட்டுப்படுத்தி எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டு வாதியின் தாயாரின் அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், வாதியின் தாயார் மறைவிற்கு பின்பு வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் வாதிடப்படுகிறது.

7.2) பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வா.சா.ஆ.1 ஆவணமான 17.10.1946ம் தேதிய கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ.2 ஆவணமானது 13.05.1950ம் தேதிய கிரைய ஆவணம் மூலம் வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் மறுக்கப்படவில்லை. மாறாக, வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின்படியும், வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின்படியும் வாதிக்கு கிடைக்கப் பெற்ற சொத்தை வாதி இந்த வழக்குரையில் வேண்டுமென்றே தவறாக காண்பித்துள்ளார் என்றும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி, வாதிக்கு கிழமேல் 13 அடி, தென்வடல் 34–1/2–அடி மட்டுமே பாத்தியப்பட்டுள்ளது என்றும், ஆனால், வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில், கிழமேல் 26 அடி, தென்வடல் 34–1/2 அடி ஆக மொத்தம் 897 சதுரடி வாதிக்கு பாத்தியப்பட்டதுபோல், பொய்யாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

7.3) இது சம்பந்தமாக, வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின்படி, தாவா சொத்தாக கீழ்க்கண்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்து விபரம்</u>

The Property is situated in Eraniam Village, Sundararajan Patti, Madurai North Taluk, Sy.No.33 and old D.No.1/58 and New 1/66, having are extent of 26 feet eastwest on the North and South and 34-1/2 feet North South on the east and west totally 897 sq.ft., bounded.

| | | |
|---|---|---|
| On the North | - | Eraniam Village Road, |
| On the South | - | 1 to $7^{th}$ defendants property. |
| On the East | - | Plaintiff's wife's Property. |
| On the West | - | $8^{th}$ defendant's property. |

7.4) வாதியின் வழக்குப்படி, தாவா சொத்திற்கு தெற்குப் பக்கம் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும், மேற்குப் பக்கம் 8ம் பிரதிவாதிக்கும் சொத்து உள்ளது என தாவா சொத்து விபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

7.5) இது சம்பந்தமாக வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சொத்து விவரமாக கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மதுரை டிஸ்டிரிக்ட்டு, மதுரை தாலுகா, 3 நிர் ஜாயிண்டு சப்ரிஜிஸ்டர்க்கு சேர்ந்த மதுரை தாலுகா, ஜாரி 56A இரணியம் கிராமத்தில் ரீசர்வே 33ல் தென்வடல் ஜாதியடி 16–1/2–ம் கிழமேல் ஜாதியடி 13, ஆக 214 – 1/2 சதுர அடிக்கு நான்குமால் விபரம்:– வடக்கு – இரணியம் கிராமம் கிராஸ் ரோடு, கிழக்கு – பெருமாளம்பலம் கூரைவீடு, தெற்கு – என்னுடைய காலிமனை, மேற்கு – தென்வடல் சந்தும், மு. பெரியணக்கோனார் கூரை வீடும். இந்த நான்குமாலுக்குட்பட்ட 214–1/2 சதுர அடிகளும், என் சொத்து விபரம் சரி."

7.6) இது சம்பந்தமாக வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சொத்து விவரமாக

கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மதுரை டிஸ்டிரிக் கூட்டு, மதுரை ஜில்லா எல்கைக்குட்ட மதுரை தாலுகா 3 நிர் ஜாயிண்டு சப்ரிஜிஸ்டர் அவர்களை சேர்ந்த மதுரை தாலுகா ஜாரி 56A இரணியம் கிராமம் ரீசர்வே நீ 33ல் தென்வடல் ஜாதியடி 18. கிழமேல் ஜாதியடி 13 ஆக 234 (இருநூற்றி முப்பத்தி நான்கு) சதுர அடிக்கு நான்குமால் விபரம். வடக்கு – இரணியம் கிராஸ் ரோடு, கிழக்கு – பெருமாளம்பலம் கூரை வீடு, தெற்கு – கிழமேலோடிய சந்து, மேற்கு – தென்வடலோடிய சந்தும், மு. பெரியணக் கோனார் கூரை வீடு. இந்த நான்குமாலுக்குள்பட்ட ரீசர்வே 33ல் 234 (இருநூற்று முப்பத்தி நான்கு) சதுர அடி கூறும் என்னுடைய சொத்து விபரம் சரி."

7.7) இது சம்பந்தமாக வா.சா.ஆ.3 சம்மதப் பத்திரத்தில் சொத்து விவரமாக கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மதுரை டிஸ்டிரிக்ட்டு மதுரை ஜில்லா எல்கைக்குட்பட்டது. மதுரை தாலுகா 3வது ஜாயிண்டு, சப் ரிஜிஸ்டர் அவர்களைச் சேர்ந்த மதுரை தாலுகா 56A இரணியம் கிராமம், ரிசர்வே 33ல் கிழமேல் ஜாதியடி 13, தென்வடல் ஜாதியடி 34–1/2 ஆக 448–3/4 சதுரடி அடிக்கு நான்குமால் விபரம் :– வடக்கு – இரணியம் கிராமம் கிராஸ் ரோடு, கிழக்கு – பெருமாளம்பலம் கூரை வீடு, தெற்கு – கிழமேலோடிய சந்து மு. பெரியனக்கோனர் கெட்டி மச்சு வீடு, மேற்கு – தென்வடலோடிய சந்தும், மு. பெரியனக்கோனர் கூரை வீடு. இந்த நான்குமாலுக்குப்பட்ட ரீசர்வே எண்.33ல் 448–3/4 (நானூற்றி நாற்பத்தி எட்டுமுக்கால் அடி) எங்கள் சொத்து விபரம் சரி."

7.8) அதாவது, வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின்படி, வாதியின் தாயார் ரீசர்வே 33ல் தென்வடல் ஜாதியடி 16–1/2–ம் கிழமேல் ஜாதியடி 13, ஆக 214 – 1/2 சதுர அடி கிரையம் பெற்றுள்ளார் என்பதும், வா.சா.ஆ.2 கிரைய ஆவணப்படி, ரீசர்வே நீ 33ல் தென்வடல் ஜாதியடி 18. கிழமேல் ஜாதியடி 13 ஆக 234 சதுரடி கிரையம்

பெற்றுள்ளார் என்பதும் தெரிய வருகின்றது. வா.சா.ஆ.3 சம்மதப்பத்திரத்திலும், ரிசர்வே 33ல் கிழமேல் ஜாதியடி 13, தென்வடல் ஜாதியடி 34-1/2 ஆக 448-3/4 சதுரடி அடி கிரையம் பெறப்பட்டதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, வா.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி, 214 - 1/2 சதுர அடியும், வா.சா.ஆ.2 கிரைய ஆவணப்படி, 234 சதுரடியும் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளபட்சத்தில் இரண்டையும் சேர்த்து பார்த்தால் 214-1/2 + 234 = 448-1/2 சதுரடி என்பது தெரிய வருகின்றது. வா.சா.ஆ.3 சம்மதப்பத்திரத்திலும், 448-3/4 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7.9) பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 கிரைய ஆவணப்படி, 448-1/2 சதுரடி சொத்து மட்டுமே வாதிக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில், வழக்குரையை 897 சதுரடி சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதனடிப்படையில், 897 சதுரடி வாதிக்குப் பாத்தியப்பட்டது என்பது குறித்து எந்த விளக்கமும் வாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை என்றும், தாவா சொத்திற்கு தெற்கேயும், மேற்கேயும் உள்ள நடைபாதையை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நடைபாதை சந்தை மறைத்து வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

7.10) வா.சா.ஆ.3 சம்மதப் பத்திரத்தில் தெற்கு - கிழமேலோடிய சந்து மு. பெரியனக்கோனர் கெட்டி மச்சு வீடு, மேற்கு - தென்வடலோடிய சந்தும், மு. பெரியனக்கோனர் கூரை வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. ஆனால், வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில், தெற்கே 1 முதல் 7 பிரதிவாதிகளின் சொத்து என்றும், மேற்கே 8வது பிரதிவாதியும், சொத்து என்றும் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

7.11) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் வாதி தரப்பில் நிரந்தர

உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மட்டும் கோரப்பட்டுள்ளதால் தாவா சொத்து வாதிக்கு தனித்துப் பாத்தியப்பட்டது என்பது குறித்து தகுந்த ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டிய சுமை வாதியையே சார்ந்தது ஆகும்.

7.12) ஆனால், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி, 214 – 1/2 சதுர அடியும், வா.சா.ஆ.2 கிரைய ஆவணப்படி, 234 சதுரடியும் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளபட்சத்தில் இரண்டையும் சேர்த்து பார்த்தால் 214–1/2 + 234 = 448–1/2 சதுரடி என்பது தெரிய வரும் நிலையில், வா.சா.ஆ.3 சம்மதப்பத்திரத்திலும், 448–3/4 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், எதனடிப்படையில் வழக்குரையில் 897 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சம்பந்தமாக எந்த விளக்கமும் வாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

7.13) இது சம்பந்தமாக வா.சா.ஆ.1 தனது குறுக்கு விசாரணையில், "என் தாயார் கிரையம் வாங்கிய இரண்டு கிரைய ஆவணங்களிலும் வடக்கே ராசு இடம் என்றும், மேற்கேயும் நடைபாதை சந்து என்றும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், வா.சா.ஆ.2லும் தெற்கே நடைபாதை சந்து என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், நான் தாவா சொத்து விபரத்தில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரையப் பத்திரங்களில் கண்ட நான்குமாலில் கூறப்பட்டுள்ள நடைபாதை சந்தை மறைத்து, சொத்து விபரம் காண்பித்துள்ளேன் என்றால் சந்து உள்ளது. அது எங்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். வா.சா.ஆ.1, 2ன்படி, கிழமேல் 13, தென்வடல் 54–1/2–அடிதான் எனக்குப் பாத்தியம் என்றாலும், நான் பிராது சொத்த விபரத்தில் கிழமேல் 34–1/2–அடியும், தென்வடல் 13 அடியும் தவறுதலாக காட்டி வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2க்கு சொல்லப்பட்டுள்ள அடி அளவிற்கு மாறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் என் சொத்துக்கு தெற்கேயும், மேற்கேயும் உள்ள நடைபாதையை அபகரிக்க

வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நடைபாதை சந்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.14) மேலும், வா.சா.ஆ.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவாச் சொத்துக்கு மேற்குப் பக்கம் 8ம் பிரதிவாதி செல்லத்தாயி இடம் உள்ளது என்றால் சரிதான். தெற்குப் பக்கம் 1 முதல் 7 பிரதிவாதிகள் இடம் உள்ளது என்றால் சரிதான். தெற்குப் பக்கம் 1 முதல் 7 பிரதிவாதிகள் இடம் உள்ளது என்றால் சரிதான். தென்புறமும், மேல்புறமும் பிரதிவாதிகளின் இடத்திற்கும், என் இடத்திற்கும் இடையே உள்ள சந்தை தாவா சொத்தில் காட்டாமல் அதையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.15) மேலும், வா.சா.ஆ.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவா சொத்தின் உரிமையை பிரதிவாதிகள் மறுக்கும் நிலையில், தாவாச் சொத்து எனக்கு பாத்தியம் என்று ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னரும், உரிமை மூலத்தை மறுத்த பின்னரும விளம்புகை கோரி பிராதை திருத்தாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நடைபாதை உள்ளதா என்பதையும், நான் கூறும் அளவுகள் சரி பார்ப்பதற்கும் ஆணையர் நியமனம் செய்யலாமா என்றால் செய்யலாம். அவ்வாறு செய்யாததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.16) மேலும், பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "வாதியின் தாயார் பாப்பாத்தி அம்மாள் 1946, 1950 ஆகிய வருடங்களில் கிரையம் பெற்ற 448–1/2 சதுர அடியைப் பொறுத்து எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அதே

போல் வா.சா.ஆ–3 ஆவணமானது வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ–2 கிரைய பத்திரத்திற்கு சம்மதம் தெரிவித்து எழுதிக்கொடுத்த ஆவணம் என்றாலும், அதை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ–6ல் கண்டுள்ள சர்வே எண்.33/7 மற்றும் சர்வே எண்.33/10 கிழமேல தெருவுக்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.33/7 தங்கம் என்ற முத்துகருப்பன், தவமணி என்று முத்துலிங்கம், மூர்த்தி என்ற பெரியண்ணன் ஆகியோர்களது பெயரில் உள்ளது. அதற்கான அடங்கல்தான் பி.வா.சா.ஆ–1 என்றால் சரிதான். சர்வே எண்.33/7க்கும் தாவா இடத்திற்கும், எனக்கும் தாவா இல்லை என்றால் சரிதான். அதே போல் பி.வா.சா.ஆ–3 ஆவணம்சர்வே எண்.33/10க்கான அடங்கல் என்றால் சரிதான். அந்த சொத்திற்கும், வாதிகளுக்கும் தாவா இல்லை என்றால் சரிதான். அதே போல் சர்வே எண்.33/6 தெரு என்றால் சரிதான். அதை பொறுத்து எங்களுக்கும், வாதிக்கும் இடையே தாவா இல்லை என்றால் சரிதான். அதே போல் சர்வே எண்.33/4ம் சர்வே எண்.33/3ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.33/3ல் மேல்புறம் 7 அடி பாதை இருந்தது, அதனையும் சேர்த்து உட்பிரிவு செய்துவிட்டார்கள். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்று நான் இதுவரை முறையிட்டதில்லை என்றால் சரிதான். அவ்வாறு தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 முதல் பி.வா.சா.ஆ–6 வரையான ஆவணங்கள் தற்போது நடைமுறையில் இல்லை என்பதால்தான் சர்வே எண்.33க்கான கூட்டு அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.17) மேலும், பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "பி.வா.சா.ஆ–6 ஆவணத்தில் காணப்படும் சர்வே எண்.33/2 ல் எவ்வளவு விஸ்தீரணம்

காணப்டுகிறது என்றால் 81 சதுரமீட்டர் காணப்படுகிறது. சர்வே எண்.33/2ல் அதிக விஸ்தீரணத்திற்கு பட்டா பெற்று, அதன் அடிப்படையில் வாதியின் சொத்தான சர்வே எண்.33/3க்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. உண்மையான தாவா சர்வே எண்.33/2 மற்றும் 33/3 ஐ பொறுத்துதான் என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்ததாலும், கிராம வருவாய் கணக்குகளை கையாள்வதில் திறமையானவர் என்பதாலும், சர்வே எண்.33/2 ஐ பொறுத்து தவறான பட்டாவை அதிக விஸ்தீரணத்தினை பெற்று வாதியின் சொத்திற்கு இடையுறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவாசொத்திற்கும் எங்களுக்கும் யாதொரு பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.18) பி.வா.சா.1 சாட்சியத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.33/6–தெருவைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கும், வாதிக்கும் பிரச்சனை இல்லை என்றும், சர்வே எண்.33/7–க்கும் தாவா இடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், சர்வே எண்.33/10–க்கும் தாவா இடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் தெரிய வருகிறது.

7.19) பிரதிவாதிகள் தரப்பு வழக்குப்படி, சர்வே எண்.33/3ல் மேல்புறம் உள்ள 7 அடிப் பாதையைச் சேர்த்து தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில், 7 அடி பாதையையும் சேர்த்து வாதி உரிமை கோருகிறார் என்றும் வாதிடப்படுகிறது.

7.20) வாதி தரப்பு வழக்குப்படி, சர்வே எண்.33/2–ல் அதிக விஸ்தீரணத்திற்கு பட்டா பெற்று பிரதிவாதி தரப்பில், வாதியின் சர்வே எண்.33/3–ல் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்கிறார்கள் என்றும் வாதிடப்படுகின்றது. அதாவது, சர்வே எண்.33/2 மற்றும் சர்வே எண்.33/3–யைப் பொறுத்து மட்டுமே பிரச்சனை

என்பது தெரிய வருகின்றது.

7.21) பிரதிவாதிகள் தரப்பு வாதமான சர்வே எண்.33/3–க்கு மேல்புறம் 7 அடி பாதை இருந்தது என்றும், அதற்கும் சேர்த்து வாதி உரிமை கோருகிறார் என்றும், வாதிடுவது சம்பந்தமாக வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் தென்வடல் சந்தும், மு. பெரியணக்கோனார் கூரை வீடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதிகள் தரப்பில் வாதிடுவதுபோல், சர்வே எண்.33/3–க்கு மேல்புறம் சந்து உள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7.22) அடுத்ததாக, தாவா சொத்தைப் பொறுத்து வாதியின் உரிமையை மறுக்கப்படும் நிலையில், வாதி தரப்பில் விளம்புகைப் பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மட்டும் கோரியுள்ளது நிலைக்கக்கூடியதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

7.23) இது சம்பந்தமாக வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 897 சதுரடி சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி, 448–1/2 சதுரடி சொத்து மட்டுமே வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிய வருகின்றது. வா.சா.ஆ.3 சம்மதப்பத்திரத்திலும், வாதியின் தாயாருக்கு 448–3/4–சதுரடி சொத்து பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7.24) அசல் வழக்குரையில், 897 சதுரடி சொத்து என காண்பிக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில், 448–1/2 சதுரடி மட்டுமே பாத்தியப்பட்டதாக தெரிய வருகிறது என்பதை கருத்தில் கொண்டும், வழக்குரை சொத்து விபரமே வாதியால் தவறாக தெரிவிக்கப்பட்டுள்ளது என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில்

தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், வழக்குரையில் 897 சதுரடி என காண்பிக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின்படி, வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட 448-1/2 சதுரடி போக வாதியின் சொத்திற்கு மேல்புறம் சந்து உள்ளது என பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேற்படி சந்தையும் சேர்த்து தனக்கு பாத்தியப்பட்ட சொத்தாக காண்பித்துள்ளார் என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டதை கருத்தில் கொண்டும், பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதியின் உரிமை மூலமே பிரதிவாதிகளால் மறுக்கப்படும் நிலையில் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலேயே உள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7.25) மேலே கண்டவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில், 448-1/2 சதுரடி மட்டுமே பாத்தியப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், வா.சா.ஆ.3 ஆவணத்திலும், 448-3/4-சதுரடி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், ஆனால், வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில், எதனடிப்படையில் 897 சதுரடி சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது சம்பந்தமாக எந்தவொரு விளக்கமும் வாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில், வாதியின் தாயார் பாப்பாத்தி அம்மாள் 1946, 1950 ஆகிய வருடங்களில் கிரையம் பெற்ற 448-1/2 சதுர அடியைப் பொறுத்து எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும், வா.சா.ஆ-3 ஆவணமானது வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 கிரைய பத்திரத்திற்கு சம்மதம் தெரிவித்து எழுதிக்கொடுத்த ஆவணம் என்றாலும், அதை பொறுத்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை

என்றாலும் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், சர்வே எண்.33/3–க்கு மேல்புறம் சந்து உள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், தாவா சொத்து சம்பந்தமாக வாதியின் உரிமையியல் மூலமே பிரதிவாதிகளால் மறுக்கப்படும் நிலையில், விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் உறுத்துக் கட்டளைப் பரிகாரம் மட்டும் கேட்டு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்பதை கருத்தில் கொண்டும், பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்தைப் பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினாக்கள் 1, 2– ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

8. <u>எழுவினா 3ற்கான தீர்வு</u> :–

3) Whether this suit is barred from non joinder of necessary parties?

8.1) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் வாதியின் சகோதரரின் வாரிசுகள் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், எனவே, இந்த வழக்கானது அத்தியாவசிய தரப்பினரை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

8.2) இந்த வழக்கானது வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வா.சா.1 குறுக்கு விசாரணையின்படி, வாதியின் மூத்த சகோதரர் ராசு, அவரது மனைவி சிந்தாமணி, அவரது மகன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்று சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு முரண்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படாத நிலையில், அவசியமான தரப்பினர்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு

வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா 3யைப் பொறுத்து வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

09. எழுவினா 4ற்கான தீர்வு :

4) To what other reliefs the plaintiff is entitled for?

எழுவினாக்கள் 1, 2 யை பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 4–யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.04.09 17:25:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

வாதி தரப்பு சாட்சிகள் :

1.வா.சா.1 – திரு. P. கருப்பணக்கோன் (எ) கோபால்.
2.வா.சா.2 – திரு. பாஸ்கரன்.

வாதி தரப்பு சான்றாவணங்கள் :

| வாதி தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.10.1946 | கிரைய ஆவணம். (ஆவண எண்.1233/1946) | அசல். |
| வா.சா.ஆ.2 | 13.05.1950 | கிரைய ஆவணம். (ஆவண எண்.1333/1950) | அசல். |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.3 | 16.05.1950 | விடுதலைப் பத்திரம். | அசல். |
| வா.சா.ஆ.4 | 23.05.1974 | ஈடுகடன் பத்திரம். (ஆவண எண்.2091/1974) | அசல். |
| வா.சா.ஆ.5 | 1996–1997 | வீட்டுவரி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.6 | 04.03.2002 | பண வரவு இரசீது. (ஆவண எண்.908/2002) | அசல். |
| வா.சா.ஆ.7 | 2001–2002 | வீட்டுவரி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.8 | 2005–2006 | வீட்டுவரி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.9 | 2014–2015<br>2015–2016<br>2016–2017 | வீட்டுவரி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.10 | 26.12.1958 | கிரைய ஆவணம். (ஆவண எண்.7954/1958) | சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.11 | ---------- | பாப்பாத்தி அம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ். | அசல். |
| வா.சா.ஆ.12 | ---------- | ராசுக்கோனார் என்ற முத்துக்கருப்பன் என்பவரின் இறப்பு சான்றிதழ். | அசல். |
| வா.சா.ஆ.13 | ---------- | குறுந்தகடு. | அசல். |
| வா.சா.ஆ.14 | 30.06.2016 | இரசீது. | அசல். |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

1. பி.வா.சா.1 – திரு. க. சௌந்திரபாண்டியன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| <u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம்</u> | <u>தேதி</u> | <u>ஆவண விபரம்</u> | <u>குறிப்பு</u> |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 21.09.2023 | சர்வே எண்.33/7–க்கான மனைவரி தோராயப் பட்டா. | அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 24.03.2020 | சர்வே எண்.33/2–க்கான மனைவரி தோராயப் பட்டா. | அசல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.3 | 21.09.2023 | சர்வே எண்.33/10–க்கான மனைவரி தோராயப் பட்டா. | அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 30.12.1969 | சர்வே எண்.33/1–க்கான அனுமந்த பட்டா. | அசல் |
| பி.வா.சா.ஆ.5 | ---------- | சர்வே எண்.33/3–க்கான அனுமந்த பட்டா. | அசல் |
| பி.வா.சா.ஆ.6 | ---------- | சர்வே எண்.33க்கான புல வரைபடம். | உண்மை நகல். |
| பி.வா.சா.ஆ.7 | ---------- | சர்வே எண்.1/65க்கான வீட்டுவரி இரசீதுகள். (எண்ணிக்கை 7). | அசல் |
| பி.வா.சா.ஆ.8 | ---------- | வெள்ளத்தாய் பெயரில் உள்ள மின் கட்டண இரசீதுகள் (எண்ணிக்கை 2). | அசல் |

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.04.09 17:25:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்
அசல் வழக்கு எண். 173/2016
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் 09.04.2026